**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 322/2022**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 19.05.2025.**

| | |
|---|---|
| **Name : மூர்த்தி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1 present. ) (Accused 2 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் வீராணத்தில் குடியிருந்து கிரேன் கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 25.09.2022ம் தேதி நான் மேட்டூரிலிருந்து முனியப்பன் கோவிலுக்கு இரு சக்கர வாகனம் ஸ்பிளண்டர் TN 3565 வாகனத்தில் எனது மனைவி மற்றும் மகன் அண்ணபூரணி, மைதீஷ் இருவரையும் உட்கார வைத்துக் கொண்டு வந்து சாமி கும்பிட்டு விட்டு வீட்டிற்கு செல்வதற்காக 4 மணிக்கு புறப்பட்டு பொட்டனேரி ஆவின் பாலகம் அருகே மேற்கிலிருந்து மேச்சேரி நோக்கி சென்று கொண்டிருந்த போது எனக்கு முன்னால் ஸ்கூட்டி ஒன்று சென்று கொண்டிருந்தது. கார் ஒன்று மோதியதால் முன்னால் சென்ற ஸ்கூட்டி மீது மோதியது. அதிலிருந்த இருவரும் கீழே விழுந்துவிட்டார்கள். நான் வலது பக்கமாக விழுந்துவிட்டேன். எனக்கு பின்னால் லாரி ஒன்று வந்தது. அந்த லாரி எனது மகன் மற்றும் மனைவி மீது மோதி விபத்து ஏற்பட்டது.

2) இந்த விபத்திற்கு யார் மேல் தவறு என்றால் கார் மற்றும் லாரி ஓட்டிய நபர் மீது தவறாகும். விபத்தின் காரணமாக என் மனைவி மற்றும் மகன் சம்பவயிடத்திலேயே இறந்து போய்விட்டார்கள். இது சம்மந்தமாக நான் காவல்

நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். புகார் மனுவிலுள்ள சங்கதி எனக்கு தெரியும். புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். ஆஜர் எதிரியை நான் பார்த்ததில்லை. லாரி மற்றும் கார் ஓட்டுநர்களை நான் பார்த்தேனா என்றால் இல்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

3) எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. ஒரு இரு சக்கர வாகனத்தில் மூன்று பேர் செல்வது தவறு என்றால் ஆமாம். எனது மகன் சின்ன பையன் ஆவார். 12 வயது. நானும், ஸ்கூட்டி இருவரும் லாரியை ஓவர் டேக் செய்து முன்னால் சென்று கொண்டிருந்தோம் என்றால் ஆமாம். சம்பவயிடம் மேடான பகுதி என்றால் சற்று மேடான பகுதி. வளைவான பகுதி என்றால் வளைவு பகுதியும் இல்லை. லாரியின் எந்த சக்கரம் எனது மகன், மனைவி மீது ஏறியது என்றால் முன் மற்றும் பின் டயர் இரண்டும் ஏறியது. லாரியை கடந்து 30 அடி தூரம் நான் சென்று கொண்டிருந்தேன்.

4) நானும், ஸ்கூட்டியில் சென்ற நபரும் ஒன்றாக தான் சென்றோம் என்றால் ஆமாம். கார் வேகமாக வந்து ஸ்கூட்டி மீது மோதியது. நான் ஸ்கூட்டியில் தான் மோதினேன் என்றால் ஆமாம். முன்னால் சென்ற ஸ்கூட்டி காரின் எந்த பகுதியில் மோதியது என்றால் எனக்கு தெரியாது. நான் லாரியை பார்த்தேன். காரில் ஸ்கூட்டி எந்த பக்கம் மோதியது என்று நான் பார்க்கவில்லை.

5) என் இரு சக்கர வாகனம் ஸ்கூட்டியில் மோதியது மட்டும் தான் தெரியும். அதன் பின்னர் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் ஸ்கூட்டியில் மோதியவுடன் கீழே விழுந்துவிட்டோம். நான் மருத்துவமனைக்கு சென்ற பின்னர் தான் எந்த வண்டி மோதியது என்று எனக்கு தெரியும். ஸ்கூட்டியில் நான் சென்ற இரு சக்கர வாகனம் மோதியதால் தான் நான் கீழே விழுந்துவிட்டேன் என்றால் சரிதான். ஸ்கூட்டியில் வந்தவர் என்ன ஆனார் என்றால் அவரும் இறந்துவிட்டார்.

6) அதன் பிறகு தான் லாரி மீதும், கார் மீதும் வழக்கு போட்டுள்ள விவரம்

தெரியுமா என்றால் ஆமாம். நான் முதல் விசாரணையில் சொன்னது போன்று தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் ஆமாம். என் இரு சக்கர வாகனத்தின் மீது கார் எதுவும் மோதவில்லை என்றால் சரிதான். விபத்து நஷ்ட ஈடு பெற வேண்டி புகார் கொடுத்தேன் என்றால் ஆமாம். பாதிக்கப்பட்டதால் போலீசார் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 322/2022**

**Prosecution witness : அ.சா.2** **Date : 19.05.2025.**

| | |
|---|---|
| **Name : ராஜா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1 present. ) (Accused 2 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வீராணத்தில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். கடந்த 25.09.2022 ம் தேதி நான் தகவல் தெரிந்து காவல் நிலையத்திற்கு மாலை 6 மணிக்கு வந்தேன். என்னை போலீசார் கேட்ட போது அ.சா.1 என் அண்ணன் என்றும் விபத்தில் இறந்தது என் அண்ணன் மனைவி மற்றும் மகன் என்றும் சொன்னேன். இந்த விபத்து இரு சக்கர வாகனத்தில் சென்ற போது கார் மோதிய பின்னிட்டு கீழே விழுந்த நபர்கள் மீது லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 25.09.2022 ம் தேதி காலை அ.சா.1 அவரது ஸ்பிளண்டர் இரு சக்கர வாகனத்தில் அவரது மனைவி மற்றும் மகன் இருவரையும் உட்கார வைத்துக் கொண்டு மேட்டூர் முனியப்பன் கோவிலில் சாமி கும்பிட்டுவிட்டு மீண்டும் வீட்டிற்கு செல்வதற்காக மாலை 4.45 மணிக்கு பொட்டனேரி கவி ஏஜென்சி

முன்பாக மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்ற சமயத்தில் லாரி ஒன்று சென்று கொண்டிருந்தது என்றால் அ.சா.1 சொல்லி தான் எனக்கு தெரியும். எனக்கு நேரடியாக ஒன்றும் தெரியாது. பின்னர் அ.சா.1 க்கு முன்பாக இரு சக்கர வாகனம் ஜூபிட்டர் லாரியும் பக்க வாட்டில் சென்று கொண்டிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அப்போது எதிரே மேட்டூர் நோக்கி வந்த கார் அதிவேகமாக வந்து வலது பக்கம் ஏறி முன்னால் சென்ற ஜூபிட்டர் வாகனத்தின் மீதும், அ.சா.1 ன் வாகனத்தின் மீதும் மோதியதால் கீழே விழுந்துவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. லாரி பின்பக்க டயர் ஏறியதால் அ.சா.1 ன் மனைவி, மகன் சம்பவயிடத்தில் இறந்துவிட்டார்கள் என்றால் பிறகு தெரிந்து கொண்டேன். சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 322/2022**

**Prosecution witness : அ.சா.3** **Date : 19.05.2025.**

| | |
|---|---|
| **Name : சரவணன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1 present. ) (Accused 2 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சின்ன வீராணத்தில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். கடந்த 25.09.2022ம் தேதி அ.சா.1 இரு சக்கர வாகனத்தில் தனது மனைவி மற்றும் மகன் இருவரையும் உட்கார வைத்துக் கொண்டு கவின் கிரில் பட்டறை அருகே சென்ற போது மேச்சேரி ரோட்டில் அவரது வண்டிக்கு முன்னால் லாரி ஒன்று சென்று கொண்டிருந்ததாக சொன்னார்கள். அப்போது இரு சக்கர வாகனம் லாரியின் வலது பக்க வாட்டில் சென்று கொண்டிருந்த சமயத்தில் அ.சா.1 அவருக்கு பின்னால் சென்று கொண்டிருந்த போது கார் மோதியதால் விபத்து ஏற்பட்டு லாரியின் பின்பக்க சக்கரம் ஏறியதால் உடல் நசுங்கி சம்பவயிடத்திலேயே அ.சா.1ன் மனைவி மகன் இறந்துவிட்டார்கள். இருவரையும் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்க்கப்பட்டது. பிரேத பரிசோதனையின் போது நான் உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

2) இறந்து போனவர்கள் என் உறவினர் என்றால் ஆமாம். சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவால் சம்பவம் நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் போலிசார் விசாரணையிலும்

**சொன்னேன் என்றால் சரிதான்.**

ஒம்/- தே.மயில்சாமி

குற்றவியல் நடுவர் எண்.2
மேட்டூர்.